மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 12 பணியிடங்கள் என்று திடீரென்று சொல்கின்றார்கள். அது பற்றிய விவரங்கள் என்னிடம் இப்போது இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தனியாகக் கேள்வி போடச் சொல்லலாம்.

மாண்புமிகு டாக்டர் செ, அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் தனியாகக் கேள்வி போட்டால் அது பற்றி சொல்லலாம்,

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 342. திரு. கே, கே, சின்னப்பன், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

342—

அரியலூர் அரசு கலைக் கல்லூரியில் பட்ட மேற்படிப்பு வசதி,

*5246 திரு. கே. கே. சின்னப்பன்:

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரியலூர் அரசு கலைக் கல்லூரியில் பட்ட மேற்படிப்பு (எம்.ஏ., எம்.எஸ்சி., எம்,காம்,) தொடங்கும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது தொடங்கப்படும்?

மாண்புமிகு டாக்டர் செ, அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை,

திரு. கே. கே. சின்னப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரியலூர் பகுதி என்பது பெரம்பலூர் நாடாளுமன்றத்தினுடைய மத்திய பகுதியாகும். அது 3 தாலுக்காக்களும் 6 சட்டமன்ற தொகுதிகளும் அடங்கிய, அதிகப்படியான தாழ்த்தப்பட்ட மக்களும், மிகவும் பின்தங்கிய மக்களும் வாழ்கின்ற பகுதியாகும். அந்தப் பகுதியிலிருந்து, கல்வி கற்கின்ற மாணவர்கள், மேல் படிப்பிற்கு, பட்டப் படிப்பிற்கு 100, 200 கிலோ மீட்டர் சென்று, திருச்சி, தஞ்சை, சிதம்பரம்-அண்ணா

1992 மார்ச் 25]

மலைப் பல்கலைக்கழகம் போன்ற பல்கலைக் கழகங்களுக்குச் செல்கின்ற ஒரு சூழ்நிலை இருக்கின்றது. நம்முடைய பின் தங்கிய மக்களின் நம்பிக்கை நட்சத்திரமாக இருக்கின்ற மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சியில் அந்தப் பகுதியிலே இருக்கின்ற தாழ்த்தப்பட்ட மக்களும், பின் தங்கிய மக்களும் பயன்படுகின்ற வகையில் மீண்டும் நம்முடைய அரசு பரிசீலனை செய்து அங்கே படிக்கின்ற மாணவர்களுக்கு பயன்படுகின்ற வகையிலே மேல்படிப்பு படிப்பதற்கு அங்கே மீண்டும் ஆவன செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1991–92 ஆம் கல்வியாண்டில் பட்ட மேற்படிப்பு துவக்க வேண்டிய கருத்துரு கல்லூரி முதல்வரிடம் இருந்து ஏதும் பெறப்படவில்லை. 1992–93 ஆம் ஆண்டில் பட்ட மேல் படிப்பு துவக்குவது குறித்த செயற் குறிப்பு பெறப்பட்டால் பரிசீலனை செய்யப்படும்.

முற்பகல் 9–55

திரு. கே. கே. சின்னப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 2 ஆண்டுக் காலமாக அந்தப் பகுதியிலே படிக்கின்ற மாணவர்களும், அந்தப் பகுதியிலே இருந்து மற்ற இடங்களில் இடம் கிடைக்காத மாணவர்களும், சென்ற சட்டமன்றக் கூட்டத் தொடரின் போதே அந்தப் பகுதியிலே உண்ணாவிரதம் இருந்திருக்கிறார்கள். அதற்கு வேண்டிய பிரேரணையை அந்தக் கல்லூரியின் முதல்வர் அனுப்பாவிட்டாலும் நம்முடைய அரசே அவர்களிடமிருந்துபெற்று மீண்டும் அந்தப் பகுதியிலே படிக்கமுடியாத நிலையில் இருக்கின்ற பின்தங்கிய மாணவர்கள் மேல்படிப்பு படிக்க வசதி செய்து கொடுக்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசே எல்லா பள்ளிகளுக்கும் என்னென்ன தேவை என்று கருத்துரு அனுப்பச் சொல்கிற பழக்கம் இப்போது இல்லை. கல்லூரி முதல்வர் தான் அனுப்ப வேண்டும். அவர்களை அனுப்பச் சொல்லி சட்டமன்ற உறுப்பினர் போன்றவர்கள், மக்கள் பிரதிநிதிகள் போன்றவர்கள் உரிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டாக்டர் சு. மணிமேகலை.

டாக்டர் சு. மணிமேகலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இது குறித்து யாரும் தன்னுடைய கவனத்திற்குக் கொண்டு வரவில்லை

யென்று சொன்னார்கள். அரியலூர் அரசு கலைக் கல்லூரி தொடங்கப்பட்டு 25 ஆண்டுகளுக்கு மேல் ஆகிவிட்டன. பல முறை, பல ஆண்டுகளாக கோரிக்கைகள் அனுப்பப்பட்டும் அங்கே பி.காம். பட்டப் படிப்பு இல்லாத நிலையை மாற்றி அதனை வருகிற கல்வி ஆண்டிலாவது துவக்க அரசு முன் வருமா என அறிய விரும்புவதோடு, நானே இது குறித்து கோரிக்கை விடுத்திருக்கிறேன். பி.காம் பட்டப் படிப்பு இல்லை யென்று கடந்த ஆண்டு மாணவர்கள் உண்ணாவிரதம் இருந் தார்கள். அப்போதே நான் இந்த கோரிக்கையை விடுத்திருக் கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோரிக்கைகளை ஆங்காங்கே பொதுக் கூட்டங்களில் வைக்கலாம் அல்லது உண்ணாவிரதங் களில் வைக்கலாம் அல்லது சட்டமன்றத்திலும் பேசலாம். ஆனால் முறையான கோரிக்கை கல்லூரி முதல்வரிடமிருந்துதான் வர வேண்டும். இது அரசு கலைக் கல்லூரி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 343, திரு. எஸ்.எஸ். ராமசுப்பு. மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

343—

ஆலங்குளம் அரசு மருத்துவமனை.

*1192 திரு. எஸ் எஸ். ராமசுப்பு:

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) திருநெல்வேலி—கட்டபொம்மன் மாவட்டம், ஆலங் குளம் அரசு மருத்துவமனையில் உள்ள எக்ஸ்ரே கருவியை இயக்க பணியாளர் இல்லாமல் இருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், உடனடியாக உரிய நடவடிக்கை எடுக்கப் படுமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ). திருநெல்வேலி—கட்டபொம்மன் மாவட் டம் ஆலங்குளத்தில் உள்ள மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையத்தில் நுண்கதிர் வீச்சாளர் பதவி 8–11–1991 அன்று நிரப்பப்பட்டது.